Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஏடு 7 இதழ் 95

National Tamil Daily தேசிய தினசரி

(17-5-65)

விசுவாவசு வைகாசி 4 முஹர்ரம் பிறை 15 திங்கட்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 18-00 | 8-25 |

நங்கையர் விரும்பும அழகிய தங்கபபவுண் நகைகளை தயாரிதது அளிப்பவர்கள்
ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்.
விஜயலெட்சுமி ஆபரண மாளிகை
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

# ‘அரசியல் ஆசிரியர்’ மீது நடவடிக்கை

## 18 பேர் பதவி நீக்கம்

### ஒரு பாடசாலையில் மாணவர் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஞாயிறு

**கடந்த பொதுத் தேர்தலின் போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள்மீது இப்பொழுது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அரசியல் விவகாரங்களில் ஈடுபாடு கொண்டதன் காரணமாக இதுவரை பதினெட்டு ஆசிரியர்கள் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த வாரத்தில் மேலும் சில ஆசிரியர்களுக்கு இப்படியான தற்காலிக பதவி நீக்க உத்தரவுகள் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.**

கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டதற்காக கடந்த வாரம் மூன்றாவது தடவையாக 10 ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் மேலும் எட்டு ஆசிரியர்களுக்கு இப்படியான பதவி நீக்க உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அரசியலில் ஈடுபட்டதாக ஆசிரியர்கள் மீது குற்றம் சாட்டி ஆயிரக்கணக்கான மனுக்கள் கல்வி இலாகாவுக்கு வந்து குவிந்திருக்கின்றன. இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட கமிட்டி முனைந்துள்ளது.

ஸ்ரீலங்கா ஜாதிக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த காரியதரிசி திரு. எல். ஆரியவன்ச பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கம்பளையில் சிரேஷ்ட பாடசாலையைச்சேர்ந்த மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

மாணவர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்செய்தால் இப்பாடசாலையை மூடவேண்டிய நிலை ஏற்படலாம் என்று கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள், மாணவர்களைத் தவறான வழியில் கொண்டு செல்ல முயற்சி செய்தால் அவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

## 20 ஜெட் விமானங்கள் தீப்பற்றி அழிந்தன!

### தென்வியட்னாம் விமான தளத்தில் சம்பவம்

சைகோன், மே 16

**சைகோனுக்கருகே பின்ஹோா விமானத்தளத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக 20 ஜெட் விமானங்கள் இன்று அழிந்துவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.**

அழிக்கப்பட்ட 20 விமானங்களில் பெரும்பான்மையானவை அமெரிக்க ஜெட்விமானங்கள் என அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்தின் விளைவாக 21 அமெரிக்க வீரர்களும், தென்வியட்னாம் வீரர்களும் கொல்லப்பட்டனர்.

இந்தச்சம்பவத்திற்குச் சதிவேலை காரணமில்லையென்றும் ஒரு ஜெட் விமானம் திடீரென தீப்பற்றியதைத் தொடர்ந்து இம் விபத்து ஏற்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## ஆசிரிய நியமனம் வழங்குமாறு விஞ்ஞானபட்டதாரிகள்கோரிக்கை

### நடவடிக்கை எடுப்பதாக எம். பி. வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்திய பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானப் பட்டதாரிகளாகப் பயிற்சி பெற்று வெளியேறி கடந்த 59-ம் ஆண்டு முதல் வேலையில்லாமலிருந்து வருபவர்கள் தங்களது குறைகளை நிவர்த்தி செய்வதற்காக ஒரு சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர்,

தங்கள் குறைகளைஒன்றுசேர்த்து இந்திய விஞ்ஞானபட்டதாரிகள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்கள். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசாங்கம் எங்கள் பெயர்களை கல்விப் பகுதியுடன் பதிவு செய்யும்படி கோரியிருந்தது. அதன்படிநாங்கள் எமது பெயர்களைபதிவுசெய்தோம். ஆனால் இன்றுவரையிலும் எங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் கையாளப்படவில்லை. பாடசாலைகள் தனிப்பட்டவர்கள் முகாமையில் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் இந்திய பட்டதாரிகளுக்கெதிராக ஒருவித பாகுபாடும் காட்டப்படவில்லை ஆனால் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் எங்களை நிலைமை மோசமானதுடன் எங்களைக்குறைந்தவர்களாக கருதி நியமனங்கள்செய்யும் பொழுது அரசாங்கம் லண்டன், இலங்கை பட்டதாரிகளுக்கே முதலிடம் வழங்குகின்றது.

கல்வித்திணைக்களத்தின் வேண்டுதலின்பேரில் எங்களில் சிலபட்டதாரிகள் சிங்களத்தில் பயிற்சியும் பெற்றனர். சிலர் உத்தியோகம் பெற்றனர். ஆனால் பலர் பயிற்சி பெற்றும் பட்டதாரிகள் என்ற பெயரளவிலேயே நடமாடுகின்றனர்; முன்னுள் அரசாங்கம் எங்கள் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை. எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு விரைவில் எமக்குஆசிரியர் நியமனம் வழங்கநடவடிக்கை எடுக்கவேண்டும்,”

**எம்.பி. வாக்குறுதி**

விஞ்ஞான பட்டதாரிகளின் (இந்திய பல்கலைக் கழகங்கள்) கோரிக்கைகள் குறித்து யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி ஜி. பொன்னம்பலம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். கல்வி மந்திரியிடம் இக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதாக இந்தப் பட்டதாரிகளுக்கு உறுதியளித்தார், எம். பி.யை இவர்கள் சந்தித்த பொழுது திரு ஸ்ரீபாலனாறும் சமூகமளித்திருந்தார்.

**நிர்வாகிகள்**

புதுவருட நிர்வாகிகள் வருமாறு: தலைவர்- எம், கைலாசநாதர், உபதலைவர்- இசெல்வி ஈ. எம். சுப்பிரமணியம், இணைக் காரியதரிசிகள்- கே. திருநாவுக்கரசு, என். பவானந்தன், பொருளாளர் ஆர். துரைசிங்கம், உதவிப்பொருளாளர்- செல்வி ஐ. ஏ. ஜெபர்ட் கமிட்டி நிர்வாகிகள்- ஏ அரியராஜா, செல்விகள் எம் கந்தையா, ஐ குமாரசுவாமி, ... பொன்னுத்துரை, திரு எம். சிவலிங்கம் என் செல்லத்துரை எஸ். திருஞானம்.

## ரேடியோவில் திருட்டு

### இருவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ரேடியோ ஒன்றில் “பிளாஷ்” பல்புகள் களவுபோனது சம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ரேடியோவில் இருந்து 700 “பிளாஷ்” பல்புகள் திருட்டுப்போய்விட்டதாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதே வீதியிலுள்ள மற்றுமொரு ரேடியோவில் இப்படியான சுமார் 80 பல்புகள் கைப்பற்றப்பட்டன. இதுபற்றி பொலிசார்விசாரித்த பொழுது களவு போன ரேடியோவின் “ஸ்டோர்கீப்பர்” ஒருவர் இந்த பல்புகளை ஒருவருக்கு தவறான முறையில் விற்பனை செய்தார் என்றும் பல்புகளை வாங்கியவர் இவற்றை அருகாமையிலுள்ள ரேடியோவுக்கு விற்றதாவும் கூறப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஸ்டோர்கீப்பரும் மற்ற நபரும் இருவார காலத்திற்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் ... பெக்டர் எம். சவுந்தரநாயகம் நடத்துகின்றார்.

## பஸ் சேவை சீர்கேட்டை தீர்க்காவிடில் சத்தியாக்கிரகம்

### மீசாலை வாலிபர்கள் எச்சரிக்கை

மீசாலை, ஞாயிறு

“வடபகுதியில் இரட்டைத் தட்டு பஸ்களும் ‘ஸ்ரீ’ பஸ்களும் வந்த பிற்பாடு பிரயாணிகள் சங்கடம் ஒரு அளவுக்குக் குறைந்த போதிலும் கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் உள்ள பஸ் பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்பட வேண்டியிருக்கின்றனர், பல தடவைகள் சாவகச்சேரிக்கு வரும் ‘பஸ்’ கள் சாவகச்சேரியுடன் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி விடுகின்றன. இதனால் மீசாலை, வேம்பிராய், அல்லாரை, மட்டுவில், தெருவாரம், கோயிலாமனை முதலிய பகுதிகளைச் சேர்ந்த பிரயாணிகள் காலை 8 மணிக்கும் காலை 11 மணிக்குமிடையே யாழ்ப்பாணம் செல்ல முடியாது பரிதவிக்கிறார்கள். கொடிகாமம் செல்லும் இரட்டைத்தட்டுபஸ்கள் இந்த நேரத்தில் மீசாலை முதலிய இடங்களில் கால்கடுக்க நிற்கும் பிரயாணிகளுக்கு கையை விரித்து விட்டுச் செல்கின்றன. இந்த நிலையை மாற்ற வேண்டும்.” இவ்வாறு தென்மராட்சிக்கு பஸ் பிரயாணிகள் சங்கப ஒன்றை மீசாலை கிராம முன்னேற்றசபை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் திரு. இ. த சுப்பிரமணியம் கூறினார்.

பஸ் பிரயாணிகளின் கஷ்டம் குறித்து திரு. க. பொ. கனகநாயகம் பேசுகையில், இப்பகுதிகளில் பஸ் பிரயாணிகள் மிகவும் துன்பம் அனுபவிக்கின்றனர் என்றும்பிரயாணச் சீர்கேட்டை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய வழி எடுக்க வேண்டும் என்றும் கூறினார்,

“சில வேளைகளில் பஸ்களில் இடமிருந்தாலும் பிரயாணிகள் ஏறுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்தப் பிரச்னை இப்பகுதிகளில் நீண்ட பல மாதகாலமாக இருந்து வருகிறது. இங்குள்ள மக்களின் பிரயாணக் கஷ்டத்தைத் தீர்க்க, சாவகச்சேரிக்கும் கொடிகாமத்துக்குமிடையே குறைந்த தூர பஸ் சேவையொன்றை ஆரம்பிக்க வேண்டும், இங்குள்ள பிரயாணிகளின் கஷ்டங்களை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால், மீசாலை இளம் வாலிபர்கள், பஸ்களின் முன் சத்தியாக்கிரகம் நிச்சயம் செய்வார்கள்” என்றும் திரு. கனகநாயகம் எச்சரிக்கை செய்தார்,

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வத்திடம் நாம் பூரண சரணாகதி அடைந்து அவரது திருவிளையையே நம்பி வாழுவதானால், நமக்குத் "தடைகளாக" வருபவையுங்கூட, உதவியாகவும் நமது முன்னேற்றத்துக்கு நன்மை செய்வதுமாக இருப்பதைக் காணலாம்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 4 உ. (17-5-65)

## யாழ்ப்பாண மாநகரசபை

சென்ற வியாழக்கிழமையன்று யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் நடைபெற்றவைகளை நேரில் பார்த்த ஒரு தமிழன்பர் மிக வருந்தினார். ஒரு மாநகரசபையையே தமிழர் சரிவர நடத்த முடியாத நிலையில் மாவட்டசபைகளையோ பிரதேசசபைகளையோ எப்படி மேலான முறையில் நிர்வகிக்கப் போகிறார்கள் என்று கவலை தெரிவித்தார். விவாதத்தின் தரமும் மிகக் குறைவாக இருந்ததாம்.

இதேமாதிரி இலை வேறு பல மாநகரசபைகளிலும் இருப்பதாயும், இங்கு நடந்துள்ளவற்றில் புதிதொன்றுமில்லை என்றும் சமாதானம் கூறப்படலாம். ஜனநாயகத்திலே கருத்து வேற்றுமைகளும் தவறுகளும் ஏற்படுவது சகஜமென்பது உண்மை. ஆனாலும் தமிழ்ப்பகுதியின் தலைநகர் என்று பெருமைப்படக்கூடிய யாழ்ப்பாணத்தின் மாநகரசபையினர் அதன் மதிப்பைக் காக்கக் கூடியவிதத்தில் பேசவும், காரியங்களைச் செய்யவும் வேண்டிய விசேஷப் பொறுப்பு இச்சமயம் எவ்வளவு அதிகமென்பதை விளக்கத் தேவையில்லை.

அன்று சபையிலே இரு விஷயங்கள் விவாதத்துக்கு வந்தன. ஒன்று கொழும்புத்துறை வட்டாரத்தில் குடிதண்ணீர் விநியோகத்தைப் பற்றியது, மற்றது பொது நூல்நிலையத்துக்கு உதவி மேற்பார்வையாளர் நியமன விஷயமாகும். இங்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்குப் போதிய பணம் இருந்திருப்பின், இந்தப் பிரச்சினையே எழாமல் போயிருக்கலாம். அந்த வட்டாரத்தில் எந்தப்பகுதியிலே முதலில் தண்ணீர்க்குழாய் அமைப்பதென்பதுபற்றி மேயருக்கும் அந்த வட்டார அங்கத்தவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதங்கள் மாநகரசபையின் கண்ணியத்தை உயர்த்தக்கூடியதல்ல.

நிர்வாக அதிகாரம் மேயரிடம் இருப்பதாலும் மேயரை ஏற்றவும் இறக்கவும் கூடிய சக்தி அங்கத்தவர் கையில் இருப்பதாலும் பல மெம்பர்களின் ஒத்துழைப்பும் மேயருக்குப் பூரணமாக இருந்தால் தான் நிர்வாகத்தை சீராக நடத்தவும், தமது பொறுப்பை நல்ல முறையில் நீடித்து நிறைவேற்றவும் அவரால் முடிவதாக இருக்கும். ஆனால் அங்கத்தவர்கள் தங்களது கட்சி ஆதரவாளர்கள் உள்ள பகுதிகளை அதிகம் கவனித்து மற்றவர்களை அலட்சியப்படுத்துவதாகவும் இதற்கு இடம் கொடாமல் பாதுகாக்கவேண்டியது தமது பொறுப்பு என்றும் மேயர் சார்பாகச் சொல்லப்படுகின்றது. இந்த ஜனநாயகமுறையில் இவ்விதபுகார்களுக்கு இடமுண்டுதான், என்றாலும் கூடுமானவரை நகரின் எந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கும் சமவசதிகள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வதே மேயர் உள்ளிட்ட எல்லா நகர பிதாக்களின் மேலான பொறுப்பும் கடமையுமாகும்.

தேர்தல் காலத்தில் கட்சி முதலிய போட்டிகள் இருப்பினும் நகரபிதாவாக ஒருவர் தெரிவு செய்யப்பட்டபின் அவர் தமது வட்டாரத்திலுள்ள எல்லாருடைய நன்மையையும் சரிசமமாகக் கவனிக்க வேண்டியவராவார், அதே போல் மேயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் கட்சி முதலிய வேற்றுமைகளை மறந்து எல்லா அங்கத்தவரின் மதிப்பையும் ஒத்துழைப்பையும் எவ்வளவுதூரம் பெற முடிகிறதோ அவ்வளவுக்கு அவர் தமது பொறுப்பை நிறைவேற்றி தமது தன்மதிப்பையும் காத்துக் கொள்ள முடியும்.

நிர்வாக அதிகாரங்களைமேயரிடமிருந்து கமிஷனர் கைக்கு மாற்றிவிடுவதாயின் இந்தச் சிக்கல்கள் வெகுவாகக் குறைந்து மாநகரசபை அதிக அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுவதுடன் மேயரின் மண்டையிடியும் அநேகமாக நீங்கலாமென்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் தமிழ்மக்களுக்குக் கிடைத்துள்ள இந்த சொற்ப மாநகரசபை அதிகாரத்தையும் பொறுப்பையும் கூட சரிவர நிறைவேற்ற முடியாது போவதாயின் அதிகமான உரிமைகளையும் பொறுப்புகளையும் ஏற்க நாம் எப்படித் தகுதியாக முடியும்? இதை எல்லாம் யோசித்து, யாழ்ப்பாண மாநகரசபையினர் தங்கள் விசேஷ பொறுப்புகளை உணர்ந்தால் வேற்றுமைகளை மறந்து பிறருக்கு முன்மாதிரி காட்டுவது போல இனியாவது ஒத்துழைத்து [illegible] முறையில் தங்கள் [illegible] கடமைகளை நிறைவேற்றுவர்.

# புத்துயிர் பெற்ற தமிழ்க்காங்கிரஸ்

— நமது அரசியல் நிருபர் —

இதுவரை 'அஞ்ஞாதவாசம்' செய்து வந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இப்போது புத்துயிர் பெற்றுள்ளது. சென்ற வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் நடந்த மகாநாடு இதற்கு ஓர் அத்தாட்சி. சென்ற பலவருடங்களாக இவ்வித மகாநாட்டை இக்கட்சியினர் நடத்தவில்லை.

சென்றபொதுத்தேர்தலுக்கு முன் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் மட்டுமே இக்கட்சிசார்பாக பார்லிமெண்ட் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சென்ற பார்லிமெண்ட் சபையிலே தமிழ்க் காங்கிரஸ் சார்பாக ஒருவரும், தமிழரசுக் கட்சி சார்பாக 15 பேரும் அங்கம் வகித்தனர். சமீப தேர்தலில் திரு ஜி. ஜி. உள்ளிட்டுதமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரில் மூவர் வெற்றி பெற்றிருக்கையில் தமிழரசுக் கட்சி எம்.பிக்களின் எண்ணிக்கை 13 க்குக் குறைந்தது. தமிழ்க் காங்கிரஸுக்கு 87 ஆயிரம் வாக்குகள் சென்ற பொதுத் தேர்தலில் கிடைக்க முடிந்ததை திரு ஜி. ஜி. முற்றவெளிப் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டு அவர்களுக்கு நன்றி கூறினார். இந்த ஆதரவும் தலைவரின் தேர்தல் வெற்றியும், தமிழ்க்காங்கிரஸ்கட்சிக்கு புதிய உற்சாகமும் புத்துயிரும் அளித்துள்ளது.

ஃ ஃ ஃ

அத்துடன் தாங்கள் ஆரம்பமுதல் ஆதரித்துவந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு டட்லி சேனநாயகா மீண்டும் பிரதமராகியுள்ளதால் தமிழ்க் காங்கிரஸுக்கும் சிறப்பாக அதன் தலைவருக்கும் அவரிடமும் இந்த அரசாங்கத்திலும் விசேஷ செல்வாக்கு இருப்பின் அதில் வியப்பில்லை மந்திரி பதவி கிடைக்க இருந்தும் அதை ஜி ஜி ஏற்காததால் அவர் செல்வாக்கு குறைந்ததாகக் கூறமுடியாது. அவர் அழைப்பை ஏற்று இரு மந்திரிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தது அவருக்கு இந்த மந்திரிசபையில் உள்ள செல்வாக்குக்கு அத்தாட்சி.

எந்தச் சமயமும் அவருக்கு ஒரு மந்திரி பதவி காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர்தான் இதுவரை அதை ஏற்கச் சம்மதிக்கவில்லை. இதனால் தமக்குப் பதவிமோகம் இல்லை என்றும் ஒரு பழைய அவப்பெயர் ஆதாரமற்றதென்றும் அவர் காட்டவும் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இதை அவர் ஒரு கூட்டத்திலும் கூறினார். ஆனால் தக்க தருணம் வரும்போது அவர் மந்திரிப் பதவி ஏற்க நேரிடின் அதில் வியப்பில்லை.

ஃ ஃ ஃ

தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளுக்குள் புதிய ஒத்துழைப்பும் ஒற்றுமையும் ஏற்பட முடியுமா? ஈழத் தமிழரின் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட இருக்கும் இச்சமயத்தில் அச்சமூகத் தலைவர்கள் ஒத்துழைக்க முன்வருவார்களா? என்று தமிழ்ப் பொதுமக்களில் பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் அவ்வித ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் ஒன்றும் காணவில்லை. ஒற்றை ஆட்சி முறையையே தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்துள்ளது. மாவட்ட சபைகளை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இலங்கையில் ஏற்படக்கூடிய 22 மாவட்ட சபைகளில் பெரும்பாலானவற்றில் தமிழருக்கு வேலை கிடைக்க முடியாதென்றார் ஜி ஜி. இருகட்சியினரும் மொழி விஷயத்திலும் சர்வகட்சி மகாநாடு கூட்டுவதுபற்றியும் கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர். சில தலைவர்களது பேச்சுகளும் இந்த விரும்பத்தக்க ஒற்றுமைக்கு உதவுமென்று தெரியவில்லை.

ஃ ஃ ஃ

இரு கட்சிகளும் நேரில் ஒற்றுமைப்பட முடியாவிட்டாலும் இரண்டும் திரு டட்லியின் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து ஆதரிக்கின்றன. இது பெரிய காரியம். மறைமுகமான இந்த ஒத்துழைப்பின் மூலம் தமிழரின் குறைகளைத் தீர்க்க இரு கட்சிகளும் பொதுவாக முனைந்துள்ளன இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாதென்பது அவர்களுக்குத் தெரியும்.

## "கொழும்புதுறை வீதிக்கே அதிக பணம் செலவிட்டுள்ளேன் நான் பாரபட்சம் காட்டவில்லை"

### மேயர் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் கொழும்புத்துறைப் பகுதித் தண்ணீர் விநியோகத் திட்டம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் மேயர் திரு. ச. செ. மகாதேவா வெளியிட்ட அறிக்கையில் மற்றைய வட்டாரங்களிலும் பார்க்க கொழும்புத்துறை வீதிக்கே இருமடங்கு அதிக பணத்தைத் தாம் செலவிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்புத்துறைப் பகுதியாகிய 5ம் வட்டாரம் முதலாவது தண்ணீர் விநியோகத் திட்டத்தில்சேர்க்கப்படவில்லை புதிய தண்ணீர்க்கம் பங்கள் போடுவதற்காக ஒதுக்கப்பட்ட பழைய 2 அங்குல நாகபூச்சி இரும்புக் குழாய்கள் 12 வட்டாரங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து 1,000 ரூபாய்க்குள் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் உட்படச் செலவழித்து அதில் எஞ்சியவற்றையும் 5ம் வட்டாரத்திற்கென ஒதுக்கப்பட்ட 1,000 ரூபாவையும் சேர்த்துக் கிட்டத்தட்ட 2,000 ரூபாய்க்கு மேல்செலவிடப்பட்டிருக்கிறது. 4 அங்குல வார்ப்பு இரும்புக் குழாய்கள் பதித்து 1,300 அடிவரையில் கொழும்புத்துறை வீதியில் நல்ல தண்ணீர் மிக அவசியமென்பதற்காக சுவாமியார் வீதி சந்திவரை 4 அங்குல குழாய் போடுவித்திருக்கிறேன்.

5ம் வட்டாரத்திற்கென ஒதுக்கப்பட்ட சிறு குழாய்களை ஆனந்தன் [illegible] வீதியிலும் போடும்படி மராமத்து அதிபருக்குப் பணித்துள்ளேன்.

5ம் வட்டார அங்கத்தவர் தனக்கு வாக்களித்த மக்களுக்கே போடவேண்டுமென்று பிடிவாதமாக இருந்தார். ஜனநாயக முறையில் அங்கத்தவர்களுக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமின்றி வாக்களிக்காதவர்களுக்கும் ஒரே மாதிரியாக அந்தந்த வட்டார அங்கத்தவர்கள் செய்யவேண்டும். அப்படியாகச் செய்யத் தவறினால் நான் முதல்வர் என்ற கோதாவில் எல்லாருக்கும் சரிசமமாக நடக்கமுடியாது. இரண்டு வீதிகளுக்கும் எஞ்சியிருக்கும் குழாய்களைப் போட்டுவிடும்படி மராமத்து அதிபருக்குக் கட்டளையிட்டிருந்தேன்.

1ம், 4ம் வட்டார அங்கத்தவர்கள் பெருந்தன்மையாகத் தங்களுடைய பகுதிக்கென ஒதுக்கப்பட்ட குழாய்களில் 800 அடியை 5ம் வட்டாரத்திற்கு உபயோகிக்கும்படி கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குழாய்களையும் உபயோகித்து 5ம் வட்டார அங்கத்தவரின் தலையீடில்லாமலிருந்தால் தண்ணீர்க் குழாய்கள் ஆனந்தன் வடலிவீதிவரைக்கும், சுவாமியார் வீதிக்கும் கட்டாயம் போடப்பட்டிருக்கும். 4 அங்குல வார்ப்பு இரும்புக் குழாய்கள் 1,300 அடி போடாமல் இருந்திருந்தால 1,100 அடிக்கு மேல் 2 அங்குல குழாயால் தண்ணீர் எடுத்துச்சென்றிருக்க முடியாது. சுவாமியார் வீதிச் சந்திவரைக்கும் தண்ணீர்விநியோகம் சென்றிராது.

சுவாமியார் வீதியிலுள்ள ஒரு நபருக்காகவல்ல, அவ்வீதியிலிருக்கும் பலரின் வேண்டுகோளுக்கிணங்கியே அவ்வீதிக்குப் போடும்படி பணித்தேன். எல்லோருக்கும் நீதியாக நடப்பதே என் குறிக்கோள்.

(கொழும்புத்துறை குழாய்த் தண்ணீர் விநியோகம் சம்பந்தமான விவாதம் இத்துடன முற்றுப் பெறுகிறது)

## ஐயாறன் எழுதுவது

தமிழகத்திலே பல பல ஊர்களிலும் சுவர்களெல்லாம் தேர்தல் பிரசாரங்கள் செய்வதைப் பார்த்தேன், பஞ்சாயத்து தேர்தல் எங்கும் நடைபெற்றது. "குதிரை வீரனுக்கே ஓட்டுச் செய்யுங்கள்", "உதய சூரியனையே ஆதரியுங்கள்", "குருவியை மறக்க வேண்டாம்" என்று பல பல படங்களும், தேர்தல் முடிந்த பின்புங்கூட நம்மைக் கேட்கின்றன. எல்லாச் சுவர்களையும் இவ்வித தேர்தல் பிரசாரம் விகாரப்படுத்தியுள்ளதுடன், பல கட்சிக் கொடிகளும் போட்டா போட்டியுடன் பறக்கின்றன.

ஒரு சுவர், "பணத்துக்காக உங்கள் வாசலை விற்காதீர்கள்" என்று உபதேசித்தது. பஞ்சாயத்து எனும் பட்டின சபைத் தேர்தல்களாயினும் அதிக பரபரப்பு. துப்பாக்கி பொலிசார் ஜீப்புகளில் காவல் புரிந்தனர். தலைவர் தேர்தலில் அதிக பணம் கைமாறியதாயும், அங்கு தேர்தல் ஊழல்கள் அதிகமிருப்பதாகவும் கேள்விப்பட்டேன்,

ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில், வெற்றி பெற்றவர் தம்மையும் மீறி, தாம் முன்னதாகப் பணம் கொடுத்து பல மெம்பர்களை "விலைக்கு வாங்கியதாக"ச் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்டேன்!

• • •

இலங்கையிலே சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் எங்கள் சுவர்களிலோ, தெருக்களிலோ ஒரு போஸ்டரும் ஒட்டப்படவில்லை என்றும் ஒரு பிரசாரப் பட்டமும் எழுதப்படவில்லை என்றும், ஒரு கொடி கூட வீடுகளில் பறக்கவில்லை என்றும், தேர்தல் ஊர்வலமும் கிடையாதென்றும் அங்கு சொன்னதும் அவர்களால் நம்ப முடியவில்லை இது எப்படி முடிந்தது? என்று கேட்டனர். பார்லிமெண்டில் இது பற்றி விசேஷ சட்ட விதிகள் ஏகமனதாக நிறைவேறியதாகவும், தேர்தல் நடந்த அடையாளமே ஒன்றும் கிடையாதென்றும, தேர்தல் மிக அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்ததாகவும் ஒரு வித பெருமையுடன் சொன்னேன். இதேமாதிரி இந்தியாவிலும் செய்தால நல்லது என்றனர் சில நண்பர்கள். இலங்கை உருவில் சிறியதாயினும். இவ்வித விஷயங்களில் இந்தியாவுக்கும் நல்ல வழி காட்டக் கூடியதாகவுள்ளதல்லவா?

• • •

இங்கு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளதைப்பற்றி இந்தியாவில் பலருக்கும் மகிழ்ச்சி. இலங்கையில் அழகான காட்சிகளையும், பெருமைகளையும்பற்றி பல இடங்களிலும் சொன்னேன். தருமை ஆதீனத்தைச் சேர்ந்த திருவையாறு கோவிலில் இம்முறை முதல் முதலாக அப்பர் சுவாமிகளின் திருவிழா ஒரு வாரம் நடந்தது: அங்குள்ள விசுவலிங்க தம்புரான் சுவாமிகள் விசேஷ ஊக்கம் எடுத்து, பல வழக்கறிஞர்களையும் அழைத்து பேசவைத்தார்: உழவாரத் திருப்பணியும் நடந்தது.

ஒருநாள் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, நாவலர் பெருமானைப்பற்றி குறிப்பிடும் போதெல்லாம், சிவாச்சாரிய

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடவியட்னாமில் அமெரிக்க தாக்குதல் 3 நாளாக நடக்கவில்லை

## இது தந்திரமான முயற்சியென ஹானோய் கண்டனம்

சைகோன், மே 16

**வடவியட்னாமில் நேற்று மூன்றும் நாளாக அமெரிக்க விமானத் தாக்குதல் நடைபெறவில்லை.**

அமெரிக்கா இத்தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தியதற்கு அரசியல், வானிலை காரணம் ஏதுமுண்டோ என்ற கேள்விக்குப் பதிலளிக்க அமெரிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

வியட்னாம் பிரச்னைபற்றிப் பேச்சு நடத்த ரஷ்யா இப்போது தயாராய் இல்லை என சோவியத் வெளிநாட்டுமந்திரி திரு. குரோமிக்கோ அமெரிக்காவுக்குத் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் அமெரிக்கத் துருப்புகள் வியட்னாமிலிருந்து வாபஸ்பெற வேண்டும் என ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் வற்புறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் தென்வியட்னாமுக்கு ஆஸ்திரேலியா துருப்புகளை அனுப்பியது, சர்வதேச சட்டத்திற்கு விரோதமான ஆக்கிரமிப்பு என ரஷ்யா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

வியட்னாமில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் கோரி அங்கு 60 பௌத்தர்கள் நேற்றுப் பிரார்த்தனை நடத்தினார்கள். அமெரிக்கா வடவியட்னாமில் தாக்குதலை நிறுத்தியதற்கு ஹானோய் ஒரு சமரச முடிவுக்கு வர முயலும் என்ற நம்பிக்கைதான் காரணம் என்றும் ஆனால் அதன்முதல் எதிரொலி நம்பிக்கையளிப்பதாய் இல்லை என்றும் ஒருசாரார் கூறுகின்றனர்.

### வடவியட்னாம் எதிரொலி

அமெரிக்க விமானத் தாக்குதல் தோல்வியடைந்துவிட்டதே இதற்குக் காரணம் என்றும் இது ஒருதந்திர முயற்சி என்றும் வடவியட்னாம் அறிவிப்புக் கூறுகிறது. அமெரிக்காவில் நூற்றுக்கு மேலான சர்வகலாசாலைகளின் பேராசிரியர்களும், மாணவர்களும் நடத்திய ஒரு விவாத அரங்கில் ஜனாதிபதி ஜோன்ஸனின் வியட்னாம் கொள்கையைக் கண்டித்தனர் என்றும், இதைத் தொடர்ந்தே தாக்குதல் நிறுத்தப்பட்டது என்றும் கருதப்படுகிறது.

---

# அவசியம் நேர்ந்தால் அணுகுண்டை உபயோகிப்போம்

## கட்டுப்பாடு எதுவும் இல்லை என்கிறார் அமெரிக்க மந்திரி

வாஷிங்டன், மே 16

அமெரிக்கா தன் சொந்த நலனை முன்னிட்டு அணுக்குண்டை வீசுவது அவசியம் எனக் கருதினால், அப்படிச் செய்யும் என பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாரா பிரதிநிதிகள் சபையின் அந்தரங்கக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

வியட்னாம்பற்றியும், தென்கிழக்காசியாவில் சீனாவின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புபற்றியும் பேசும்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

"எந்த நிலைமையிலும் அணுக்குண்டை வீசுவதில்லை என்ற கட்டுப்பாட்டிற்கு நாம் உட்பட்டிருக்கவில்லை" என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்க் லண்டனில் அளித்த பேட்டி ஒன்றில், வியட்னாம் பிரச்னைக்கும், சீனாவின் அணுக்குண்டு சோதனைக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தாம் கருதவில்லை எனக் குறிப்பிட்டார்.

சீனா இச்சமயத்தில் அணுக்குண்டு சோதனை நடத்தும் என அமெரிக்கா எதிர்பார்த்தது என்றும் மக்னமாரா கூறினார்.

சீனாவின் அணுக்குண்டுபெருமுயற்சியின்மீது செய்யப்பட்ட, சின்னஞ்சிறு அணுக்குண்டு என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

---

# இந்தியப் பிரதமர் லெனின் கிராட் புறப்பாடு

புதுடில்லி, மே. 16

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி 4 நாள் மாஸ்கோவில் பேச்சு நடத்திய பின் நேற்று லெனின்கிராடுக்குப் புறப்பட்டார். அவருடன் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினும் சென்றிருக்கிறார்.

நேற்று திரு சாஸ்திரி மாஸ்கோவில் டெலிவிஷனில் தோன்றிப் பேசியதை 4 கோடி ரஷ்ய மக்கள் கண்ணுற்றனர். சர்வதேச நிலைமை அபாயகரமான கட்டத்திற்கு வந்திருக்கிறதென்றும், பெதுஜன அபிப்பிராயத்திற்கு மாறாக சீனா மீண்டும் அணுக்குண்டு சோதனை நடத்தியிருக்கிறதென்றும் அப்போது அவர் கூறினார்.

அங்கோலா, மொஸாம்பிக், தென்ரெடிஷியா ஆகிய இடங்களில் காலனி ஆதிக்கம் முடிவுக்கு வந்து விடும் என்றும் திரு. சாஸ்திரி நம்பிக்கை தெரிவித்தார்.

"இந்தியா எவருடைய எல்லையிலும் உரிமை கொண்டாடவில்லை. ஆனால் இந்தியாவின் எல்லைகளை எவரும் பிடிப்பதையும் அனுமதிக்க மாட்டோம்" என்றார் அவர்.

திரு. சாஸ்திரியின் பேச்சு, ஒரே சமயத்தில் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு, அன்று மாலை ஒலிபரப்பில் பிரதான செய்தியாக விளங்கியது.

இந்தியப் பிரதமரைக் கௌரவிக்கும் பொருட்டு ரஷ்ய பார்லிமெண்டின் ஒரு கூட்டம் நடைபெற்றது.

சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் அப்போது பேசுகையில், மூன்றும் நாடு ஒன்றுடன் ரஷ்யா உறவு கொள்ள முயன்றால் எவ்வகையிலும் அது ரஷ்ய-இந்திய நட்பைப் பாதிக்கும் முறையில் இருக்காது எனக் கூறினார். பாகிஸ்தானைப் பற்றியே இவ்வாறு அவர் கூறினார்.

ரஷ்யத் தலைவர்களுடன் தமது சந்திப்பு மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது என திரு. சாஸ்திரி இக் கூட்டத்தில் தெரிவித்தார்.

---

## நாகா பேச்சு ஒத்திவைப்பு

புதுடில்லி, மே 16

இம்மாதம் 17, 18ந் தேதிகளில் பகைநாகர்களுடன் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் ஜூன் 8ந் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

## "கம்யூனிஸ்டுகளே காரணம்"

கோலாலம்பூர், மே 16

மலேஸியாவின் போக்குக்கு கம்யூனிஸ்டுகள் தான் காரணமென்றும் கம்யூனிஸ்ட் செல்வாக்கை ஒழித்தால் தான் இந்தோனேஷியாவுடன் சமாதானம் சாத்தியமென்றும் மலேஸியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

---

## நட்சத்திரம புது கண்டுபிடிப்பு

லண்டன், மே 16

நட்சத்திரக் கூட்டத்தில் புதிய பெரு நட்சத்திர மண்டலம் ஒன்றை பிரிட்டிஷ் வானசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதில் ஒளிமிக்க 3000 நட்சத்திரங்கள் இருக்கின்றனவாம். ஆனால் மொத்தம் 10 லட்சம் நட்சத்திரங்கள் இங்கு இருக்கும் என நம்பப்படுகிறது.

---

## இலங்கை நடனக்காரர் பங்குபற்றுவர்

லண்டன், மே 16

வருகிற செப்டம்பர் 16ந் தேதி இங்கு நடைபெறவிருக்கும் ஒரு சர்வதேசக் கலைவிழாவில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை கலைஞர்கள் பங்குபற்றிக்கொள்ளுவார்கள். இலங்கையிலிருந்து கண்டிய நடனக்காரர்கள் பலர் கலந்துகொள்வார்கள், இந்தியாவிலிருந்து பிரபல ஷனாய் வாத்தியக்காரர்கள் பிஸ்மில்லா கான் சித்தார் வாத்திய நிபுணர் ரவிசங்கர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பாகிஸ்தானிலிருந்து 2 பாடகர்கள் கலந்துகொள்வார்கள்

---

## ரஷ்யாவுக்கு ஜோன்ஸன் அழைப்பு

வாஷிங்டன், மே 16

தென்கிழக்காசியாவில் யுத்தத்திற்குப் பதில் பொருளாதார அபிவிருத்துக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவும்பணியில் ரஷ்யாவையும் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி ஜோன்ஸன் கேட்டிருக்கிறார்.

---

## கங்கா பூர்ண வெற்றி

புதுடில்லி. மே 16

இமயமலையில் 24375 அடி உயரமான கங்கா பூர்ண சிகரத்தில் மேற்கு ஜெர்மன் மலையேறும் கோஷ்டி வெற்றி பெற்றிருக்கிறது. இக் கோஷ்டியில் 8பேர்களும், 8 ஷெர்பாக்களும் இருக்கிறார்கள்.

---

## சீன வெடிப்புக்கு பிரிட்டன் வருத்தம்

லண்டன், மே 16

சீனா 2-வது அணுக்குண்டு வெடித்தது குறித்து பிரிட்டன் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருக்கிறது. அணு ஆயுதங்கள் பரவக்கூடாது என்ற உலக அபிப்பிராயத்துக்கு மாறுபட்ட முறையில் இச்செயல் நடந்திருப்பதாயும், அணுத்தடை ஒப்பந்தத்தை சகல நாடுகளும் ஏற்கவேண்டும் என்றும் அது கூறியிருக்கிறது. அணுத்தடை ஒப்பந்தத்தை ... பெரியவல்லரசுகள் ... பிராஞ்சமேயாகும்.

---

# "பேலே' தாருங்கள் ரூபா 40 லட்சம் தருகிறோம்"

## பிரேஸில் விளையாட்டு வீரருக்கு மகத்துவம்

லாபாலோ (பிரேஸில்) மே. 16

பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளிலுள்ள பல உதைபந்தாட்டக் கிளப்புக்கள் பிரேஸிலைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் பேலேயை தங்களுக்கு மாற்றித் தந்தால் 3,00,000 பவுன் (சுமார் 40 லட்சம்) தருவதாக கூட்டாக விண்ணப்பித்திருக்கின்றன

இந்த ஒவ்வொரு கிளப்பின் சார்பாகவும் பேலே ஒரு வருடம் விளையாட வேண்டும் என அவைகள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

இந்தப் பேரம் பற்றி பிரேஸில் உதைபந்தாட்டச்சபை ஆலோசிக்கும் என்றும், ஆனால் பேலேயை விற்பதைவிட, அவரைத் தங்களுடன் வைத்திருந்தால் இன்னும் அதிகப்பணம் பெறமுடியும் என்றும் இங்கு அறிவிக்கப்பட்டது.

பேலே உலகத்தின தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர். இந்த இளம் வீரரின் மாதவருமானம் பிரேஸில் ஜனாதிபதியினரைப் போல் மும்மடங்கு எனக்கூறப் படுகிறது.

---

# ஸ்திரமான அரசாங்கம் அமைந்தால் பொருளாதார உதவி

## டொமினிக்கனுக்கு ஜோன்ஸன் உறுதி

வாஷிங்டன், மே. 16

டொமினிக்கனில் ஒரு ஸ்திரமான ஜனநாயக அரசாங்கம் அமையுமானால் அமெரிக்கா அதற்கு கணிசமான பொருளாதார உதவி அளிக்கும் என ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிறார். அங்கு ஒரு தீர்ப்பை உண்டாக்க அமெரிக்க ராஜ்யங்களின் ஸ்தாபனம் விரைவில் செய்யமுடியும் என நம்புவதாயும் அவர் கூறினார்.

ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் டொமினிக்கனில் தமது விசேஷ பிரதிநிதியாக வெனிசூலா அம்பாஸிடரை நியமித்திருக்கிறார்.

யுதாண்டின் ராணுவ ஆலோசகரும், இந்தியாவைச் சேர்ந்தவருமான ஜெனரல் ரிக்கி தலைமையில் 5 பேரடங்கிய உண்மை அறியும் ஐ. நா. கோஷ்டி ஒன்று டொமினிக்கன் தலைநகர் சாந்தா டொமிங்கோவுக்கு வந்திருக்கிறது.

---

# இந்தியாவில் வெஸாக்

புதுடில்லி, மே. 16

கௌதம புத்தரின் 250 வது ஜயந்தி தினம் நேற்று டில்லியில் கொண்டாடப் பட்டது லடாக்கிலுள்ள பௌத்த விகாரையில் நடைபெற்ற விழாவில் தலாய்லாமா பேசினார். உலக தோழமை, சகிப்புத்தன்மை, சமாதானம் ஆகிய புத்தரின் போதனைகளை அவர் அப்போது வலியுறுத்தினார்.

திபேத்திலுள்ள சீனர்கள் புத்தமதத்தை அகற்றிவிட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

பாரத மகாபோதி சங்கம் ஒழுங்கு செய்திருந்த பௌத்த நிகழ்ச்சிக்கு தகவல் மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி தலைமைதாங்கினார். இவ் வைபவத்தில் இலங்கை கைகமிஷனரும் பங்குபற்றினர்.

---

# சீன ஊடுருவல் பற்றி இந்தியா புகார் தாக்கல்

புதுடில்லி, மே. 16

இம்மாதம் 9-ம் திகதி மனாகணவாய்க்கருகே, வேண்டுமென்றே சீனா அத்துமீறிப் பிரவேசித்ததாக, இந்தியா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

இந்த ஆட்சேபக் குறிப்பு டில்லியிலுள்ள சீனத் தூதராலயத்தில் சேர்ப்பிக்கப்பட்டது.

பாரத - திபேத் எல்லையின் நடுப்பகுதியில், இந்தியப் பிரதேசத்திற்குள் அரை மைல் தூரம் ஒரு சீன ராணுவக் கோஷ்டி பிரவேசித்தது என்றும், அங்கு இந்திய எல்லைப் பொலிஸைக் கண்டவுடன் மும்முறை சுட்டுவிட்டுப் பின் வாங்கியது என்றும் அறிக்கப் பட்டது.

மனா கணவாய் தான் எல்லைக் கோடாக விளங்குகிறதென்றும், இந்த நிலைமை ஏற்கனவே 1960-ம் ஆண்டில் சீனா வினால் ஏற்றுக்கொள்ளப் பட்டது என்றும் ஆட்சேபக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

---

## 50 பேர் பனியில் புதையுண்டனர்

பொன், மே 16

ஜெர்மனியிலுள்ள அல்பைன்ஸ் மலைச்சரிவில் 50 உல்லாசப்பிரயாணிகள் பனிக்குள் புதையுண்டிருப்பதால், அவர்களை மீட்கும் முயற்சியில் 1000 நிவாரண ஊழியர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். 8 உடல்கள் மீட்கப்பட்டன. சுவிட்சர்லாந்தில் பனி வழுந்தது காரணமாக 8 பேர் மாண்டனர்.

---

## யூகோவில் வெள்ளம்

பெல்கிரேட், மே 16

யூகோஸ்லேவியாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் வீடிழந்தகாய் அறிவிக்கப்பட்டது.

---

5-ம் டெஸ்ட்

## 46 ரன்களுக்கு 5 விக்கெட் விழ்ந்தது

போர்ட்ஆவ்ஸ்பெயின், மே 16

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியக் கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 5-வது இறுதிகிரிக்கெட் டெஸ்டில், நேற்று ஆட்ட இறுதி வரை ஆஸ்திரேலியா 9 விக்கெட் நஷ்டத்திற்கு 294 ரன்கள் எடுத்தது. மேற்கிந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 224 ரன்கள் எடுத்தது.

கிரிபித்ஸ 46 ரன்களுக்கு 5 ஆஸ்திரேலிய விக்கெட்டுகளை வீழ்த்தனர்.

---

## ஸ்டேஸி லண்டன் வந்தார்

லண்டன், மே 16

இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் ஸ்டேஸி லண்டன் வந்து சேர்ந்தார். இப்போது ஷேக்அப்துல்லாவுக்கு கடுமையான பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததானம் செய்த கல்லூரி மாணவர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் இரத்த வங்கிக்கு கடந்த சனிக்கிழமை இரத்த தானம் வழங்குவதில் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டது.

இரத்த தானம் செய்வதில் யாழ்ப்பாணத்தில் சில காலமாக பொதுமக்கள் அதிக அக்கறைகாட்டாமலிருந்து வந்தனர். ஆனால் அண்மையில் பத்திரிகைகளும் பிரமுகர்களும் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று பலர் இரத்ததானம் செய்ய முன்வந்தது வரவேற்கத்தக்க விஷயமாகும் என்று இரத்த வங்கி பகுதியை சேர்ந்த ஒரு அதிகாரி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மற்றைய மாணவர்களுக்கும் கல்லூரிகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் யாழ்-மத்திய கல்லூரியைச் சேர்ந்த எச். எஸ். சி. சங்க உறுப்பினர்களில் 22 பேர் இரத்ததானம் செய்தார்கள். இரத்தத்தை சேர்க்கும் வான் கல்லூரிக்குச் சென்று இரத்தத்தை மாணவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டது. யாழ்ப்பாணத்தில் முதல் இரத்ததானம் வழங்கிய பெருமை யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்ததாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முன்மாதிரியைப்பின்பற்றி மற்றைய கல்லூரிகளும் இரத்த தானம் செய்ய முன்வந்தால் அது நோயாளிகளுக்கு எவ்வளவோ நன்மையையும் நிம்மதியையும் அளிக்கும் என்று இரத்த வங்கி வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

---

## நிவாரண உதவிகள்

### மந்திரியை எம்.பி. பேட்டி காண்பார்

சாவகச்சேரி, ஞாயிறு

சமீபத்தில் வீசிய சூறவளியினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் திருப்திகரமாயில்லை என்று சென்ற மாதம் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது, இதன் காரணமாக மாதவருமானம் ரூபா 150க்குக் குறைவாயுள்ளவர்களுக்கு மட்டுமே நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று இருப்பதை மாதவருமானம் ரூபா 200க்குக் குறைவாயுள்ளவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று திருத்துமாறு கோரும் தீர்மானம் மேற்படி கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

இது சம்பந்தமாக சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் விரைவில் சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணரத்தினவை பேட்டி காண்பார்.


# ராதா குரு தைலம்




240, வியாதிகளுக்கு மகா சஞ்சீவி

தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி, வயிற்றுவலி, பல்வலி, விஷக்கடி, இருமல், நெஞ்சுச்சளி, வாதம், வலிப்பு, ஜன்னி, வாய்வுப்பிடிப்புகள் முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்தது.

எஸ். சுப்பிரமணியம் அன் கோ

160, செட்டியார் தெரு, கொழும்பு.

53, கே. கே. எஸ். றேட், (போன்: 541) யாழ்ப்பாணம்.



# இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கும்பளித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) | சித்ரா (ஹட்டன்) | தீவொலி (நுவரேலியா)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி காலை, 10-00, பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ராஜேந்திரன்
★ விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

# பச்சை விளக்கு


# ஜீ. ஜீ. மீண்டும் தலைவரானர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவராக மீண்டும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், நேற்றுக்காலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் வருடாந்த மகாநாட்டில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உடுப்பிட்டி எம். பி திரு சிவசிதம்பரம் தமிழ்க்காங்கிரஸ் பொதுக்காரியதரிசியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார், தனாதிகாரிகளாக திருவாளர்கள் மீ. திருநாவுக்கரசு, என். நடராசா ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்க்காங்கிரஸ் வருடாந்த மகாநாடு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமானது. மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கொழும்பு மற்றும் பல இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

நியாயதுரந்தரர் திரு எஸ். ஆர். கனகநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார், தமிழ்க் காங்கிரஸ் இணைக்காரியதரிசி திரு. மி. சங்கரப்பிள்ளை வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

---

## காங்கிரஸின் 21-வது ஆண்டு மகாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 21-வது மகாநாடு வவுனியாவில் நடைபெறுமென்றும், அடுத்த மகாநாட்டுக்கு முன் தமிழ்க்காங்கிரஸ் மாதர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்படுமென்றும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நேற்று நடைபெற்ற வருடாந்த மகாநாட்டில் தெரிவித்தார்.

மாதந்தோறும் தொகுதிவாரியாக பிரசாரக் கூட்டம் நடத்துவதென்றும், கிளைகள் இல்லாத இடங்களில் கிளைகள் ஆரம்பிப்பதென்றும் தெரிவிக்கப்பட்டது.

பொதுச் சபைக்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 25 அங்கத்தவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டனர். கொழும்பு கிளை சார்பில் 15 அங்கத்தவர்கள் மத்திய கமிட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாணத் தொகுதிக்கு 50 அங்கத்தினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## ரயில் சாரதிகள் பற்றாக்குறை?

வெள்ளவத்தை, வெள்ளி

இலங்கைப் புகையிரத சேவையில் சுமார் அறுபது புகையிரதச் சாரதிகளின் இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று புகையிரத உத்தியோகத்தர் ஒருவர் கூறினார். அரசாங்கம் புகையிரதச் சாரதிகளுக்கு அதிகமான பணத்தை ஒவ்வொரு மாதமும் மேலதிகநேர வேலைக்காக கொடுக்கிறது, என்றும் அவர் தெரிவித்தார்.

---

## எம். ரி. கழகம் வென்றது

கோண்டாவில், ஞாயிறு

இணுவில் எம். ரி. விளையாட்டுக்கழக வீரர்களுக்கும் சண்டிருப்பாய் றெக்கற் விளையாட்டு வீரர்களுக்குமிடையே இணுவில் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் எம். ரி. விளையாட்டு வீரர்கள் ஏழு அதிக ஓட்டங்களையும், ஏழு விக்கெட்டுகளையும் மேலதிகமாகப் பெற்று றெக்கற் கழகத்தைத் தோற்கடித்தது.


REGAL – JAFFNA

NOW SHOWING

Anthony Quinn - Silvana Mangano

in

BARABBAS

(Techniscope-Technirama)


# மாணவரின் ஆற்றலை அறிந்து அத்துறையில் ஊக்குவிக்கவேண்டும்

## ஆசிரியரின் பணி குறித்து அதிபர் கருத்து

வவுனியா, ஞாயிறு

"திறமையும் ஆற்றலும் இல்லாதவர்கள பொதுவாக இன்று எங்கும் இல்லை. எந்த மாணவனிடமும் ஏதோ ஒரு துறையில் விசேட நாட்டமும் ஆற்றலும் உண்டு ஆகவே ஆசிரியர்களாகிய நாம் எமது பொறுப்பில் விடப்பட்டுள்ள வருங்கால சந்ததியினரைக் கவனமெடுத்து வழி நடத்தவேண்டும். ஓவியத்தில் சிறந்த கலைஞனாக வரக்கூடிய மாணவன் ஒருத்தனை சற்றும் சிந்தியாது சரீர வசதியற்றவரை - இசைப் பயிற்சியில்லாவிட்டால் அவருக்கு இசையும் சரிவராததுடன் ஓவியத்தில் உள்ள இயல்பான நாட்டமும் ஊக்கமும் கருகிவிடும் ஆசிரியரின் பணி தமது மாணவர்களின் ஆற்றலை அறிந்து அவர் அவருக்குரிய துறையில் கூடிய பயிற்சி அளித்து அத்துறையில் அவரை விற்பன்னராக்குவதே!"

இவ்வாறு கல்வெட்டித்திடல் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பெற்றார் தின விழாவில் உரை நிகழ்த்துகையில் அதிபர் திரு இ. த. சுப்பிரமணியம் கூறினார்.

பாடசாலைக்கு ஒரு விளையாட்டுமைதானமும் மண்டபமும் பல உபகரணங்களும் தேவை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

விழாவுக்கு விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிராமாதிகாரி திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி பேசுகையில் பின் வருமாறு கூறினார்.

"ஒருபாடசாலை முன்னேற்றமடைவதற்கு அப் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றார், கல்வி அதிகாரிகள் ஆகியவர்களிடையே பரஸ்பர ஒத்துழைக்க வேண்டும். இத்தகைய ஒத்துழைப்பை அதிபர் சுப்பிரமணியம் பெற்றுக் கொண்டதனால்தான் இப்பாடசாலை உயரிய நிலையை அடைய முடிந்தது. போதிய வசதிகள் இல்லாவிட்டாலும் ஒரு கிராமம் முன்னேற முடியும். ஆனால் ஓர் சிறந்த பாடசாலை இல்லாத கிராமத்தில் அடுத்த மூன்று சந்ததியினர் கூட பாதிக்கப் படுவார்கள்"

திரு. சி. தம்பிப்பிள்ளை, செல்வி, கனகசபை பரமேஸ்வரி உட்பட பலர் பேசினர்.

# 'ஒற்றையாட்சி மூலம் எமது உரிமைகளைப்பாதுகாக்கமுடியும்'

யாழ்ப்பாணம். ஞாயிறு

"இலங்கையில் முதன்முதலாக தமிழர்களுக்கு மட்டுமன்றி, முஸ்லிம்களுக்கும், மலைநாட்டு தமிழர்களுக்குமாக பாடுபட்டு, அவர்களின் உரிமைகளை பாதுகாக்க தோன்றிய ஒரே ஒரு கட்சி தமிழ்க் காங்கிரஸ்தான் என்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தும் போது நியாய துரந்தரர் திரு எஸ். ஆர். கனகநாயகம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: நாங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு மட்டும் உரிமை கோரவில்லை. இலங்கை முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்காக உரிமை கோருகிறோம். 20 ஆண்டுகளுக்குமுன் தமிழ்க்காங்கிரஸின் கோரிக்கையின்படி இலங்கை அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக 29 ம் பிரிவு சேர்க்கப்பட்டது. இது தமிழ்க் காங்கிரஸின் பெரிய வெற்றி. ஆனால் தமிழினத்திற்கு இந்த பாதுகாப்பு போதாது. முக்கிய பிரிவு சேர்க்கப்படவேண்டும்.

1815 ம் ஆண்டுமுதல் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தோம். பல வருடங்களின் பின் ஒரு கட்சியினர் சமஷ்டி ஆட்சி கோருகின்றனர். ஒற்றையாட்சியில்தான் நமது உரிமைகளைப் பாதுகாக்க முடியும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் எல்லா இனங்களும் ஒற்றுமையாக வாழ தேசிய அரசாங் ஏற்படவேண்டும் என்று 20 வருடங்களாக பாடுபட்டு வந்தோம். இன்று எங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

---

## கொலைமுயற்சி வழக்கு

சாவகச்சேரி, ஞாயிறு

வவுனிக்குளம் நீர்ப்பாசன இலாகாவில் ஓவர்சியராகக் கடமையாற்றிய ரி. சிவஞானம் என்பவரைக கடந்த வருடம் அக்டோபர் மாதம் 21ம் திகதி அதே இலாகாவைச் சேர்ந்த எஸ். தங்கராஜா, வி. வடிவேலு ஆகிய இருவரும் கொலை செய்ய முயற்சித்ததாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு பி. ஜெயபால சில்வா விசாரணையின்பின் எதிரிகளை டிஸ்ரிக் கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

---

## குடிதண்ணீர்க் கஷ்டம்

யாழ்ப்பாணம் திங்கள்

சுழிபுரம் பகுதியிலுள்ள கெல்லியான் கிராமத்திலுள்ள மக்கள் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் குடிதண்ணீரின்றி தாங்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு "பைப்புகள் அமைத்துக் கொடுக்கும்படியும் கோரியுள்ளனர்,

"குடிதண்ணீரில்லாது நாங்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றோம் இக்கிராமத்தில் 4-00க்கு மதிகமானவர்கள் இருக்கிறோம் குடிதண்ணீர் பெறுவதற்காக அதிக தூரத்திற்கு கால் நடையாகச் செல்லவேண்டி இருக்கிறது. தண்ணீரில்லாது கால்நடைகளும் கஷ்டப்படுகின்றன இதன் காரணமாக வருடந்தோறும் ஏராளமான கால் நடைகள் பலியாகின்றன. இந்தப் பிரச்னையை தீர்த்து வைக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். விரைவில் இப்பகுதியில் "பைப்" வசதி செய்து கொடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்" என்று இம் மகஜரில் அவர்கள் கோரியுள்ளனர்.

---

## சனசமூகநிலைய கூட்டம்

மன்னார், சனி

நிர்வாகசபைக் கூட்டம் அண்மையில் நிலையத் தலைவர் திரு. க. கோவிந்தபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

சங்க வளர்ச்சிக்காகப் பல பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டு சபையில் அங்கீகரிக்கப் பட்டன. விசேஷமாக விளையாட்டுமைதானத்தில் ஒரு தூங்கைக் கட்டடம் ஒன்று அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்தலஸ்தாபன மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கும் திரு. திருச்செல்வத்திற்கு ஒரு வாழ்த்துச் செய்தியும் மன்னார்த் தொகுதி எம். பி. திரு அழகக்கோனுக்கு வாழ்த்துச் செய்தியும் அனுப்புவதென்று சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சைவக்கோயில்களை கேளிக்கை நிலையமாக்கக் கூடாது'

## இந்து வாலிபர் மன்றக் கூட்டத்தில் கருத்து

சங்கானை, ஞாயிறு

"இக்காலைய பாடல்கள் பல கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறி மனிதரை மிருகங்களாக்குகின்றன. இத்தகைய பாடல்களைக் கோவில் திருவிளக்குகளிலே ஒலிபெருக்கி மூலம் பரப்புகிறார்கள். இப்படியான காதல் பாட்டுகளால் பக்தி மலருமா? அருள் நெறி வளருமா? சைவப் பெருமக்கள் கோவில்களைக் கேளிக்கை நிலையங்களாக்காது அருள் நெறி வளர்க்கும் அறச்சாலைகளாக்கவேண்டும்" என்று திருமு. சிவானந்தம் சங்கானை இந்து வாலிபர் மன்றத்தின் மாதாந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"பண்பட்ட இசைதான் மனிதரைத் தேவராக்கும் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என நாயன்மார்கள் நாளெல்லாம் நல்லிசையால் கடைத்தேறினார்கள். தாவரங்களும் மிருகங்களும் பண்பட்ட இசையால் பலன்பெறுகின்றன என விஞ்ஞானிகள் கண்டறிந்து கூறிய பின்னரும் நாம் எமது பாரம்பரிய இசையைப் பேணாது சில்லறைச் சினிமாப் பாடல்களுக்கு இடமளிக்கலாமா? தேவார திருவாசகங்களைக் கருத்தோடு பண்ணோடு பாட எமது இளைஞர் சந்ததியினரை ஊக்குவிக்க வேண்டும். முறையான இசையாசிரியர்களைக் கோவில் தோறும் நியமித்து இசை வளர்ப்பதற்கு எமது மன்றம் முன்னோடியாகத் திகழவேண்டும்"

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கானை முருகமூர்த்தி கோவிலில் எமது மன்றம் நடத்தும் சமயபாட வகுப்பின் மாணவர் தொகை அதிகரித்திருப்பதால் மேலும் ஒரு சைவாசிரியரை நியமித்தல். தேவார, திருவாசகங்களைப் பண்ணோடு பயிற்றவும் தமிழிசையைப் பேணவும் இசை வகுப்பைத் தொடங்குதல். சங்கானையில் வள்ளுவர் விழாவையும் அதையொட்டித் திருக்குறள் மனன, பேச்சுப் போட்டிகளையும் நடத்தல்.

# "கோயில்களில் கலைநிகழ்ச்சிக்கு இடமளிக்க வேண்டும்"

மீசாலை, ஞாயிறு

"சதுர்க்கச்சேரியும் வாண வேடிக்கைகளும் நடந்த கோயில்களில் இப்போது கூட்டுப் பிரார்த்தனையும் புராணப் படனமும் நடைபெறுகிறது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். சிலகோயில்களில் பலியிடும் வழக்கம் இருப்பது மனதை வாட்டுகிறது. தென்மராட்சியில் பலியிடும் வழக்கம் இல்லாவிடினும் சில வடபகுதிக்கோயில்களில் பலியிடப்படுவதை நாம் அறிவோம். இத்தகைய இரண்டொரு கோயில்களிலும் அவ்வழக்கத்தை நிறுத்தி கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு ஆதிய கலைநிகழ்ச்சிகளுக்கு இடமளித்து எமது கோயில்களின் புனிதத்தைக் கூட்டுவோமாக" இவ்வாறு சங்கத்தானை கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் தென்மராட்சி சைவமகா சபைச் செயலாளர் திரு. ஆர். சி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். கே. செல்லையா தலைமை வகித்துப் பேசுகையில் மானிடப்பிறவி எடுப்பது அரிது என்றும் ஆலய வழிபாட்டின் மூலம் பிறவிப்பயனை அடைய முயல வேண்டும் என்றும் கூறினார்.

திரு. வீ. ந. சண்முகம் கோயில் திருப்பணிச்சபையின் அறிக்கையைச் சமர்ப்பித்து கோபுரவாயில் மதில் வேலையைப் பூர்த்திபண்ண நிதியுதவுமாறு கேட்டு பகபுண்ணியங்களை விளக்கிப் பேசினார்.

தலைமையாசிரியர் திரு. க. சங்கரப்பிள்ளை, திரு. வி. கே. ஆறுமுகம், திரு. க. குமாரசாமி, திருநெறிக்கழகச் செயலாளர் திரு. க. நல்லதம்பி, வித்துவான் மூ. சபாரத்தினம், திரு சோமசுந்தரம், திரு. சுவாமிநாதன், திரு ஆர். ஓ. பிலாமணி, திரு கந்தையா உட்படப் பலர் உரையாற்றினர்.

முடிவில்வண்ணைவைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தான வித்துவான் திரு. பூங்குடி திருஞானசம்பந்த கோஷ்டியார் "முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றி வில்லுப்பாட்டும் கதாகாலட்சேபமும்நிகழ்த்தினார்கள்.

திருப்பணிச் சபைக்குரிய உறுப்பினர் பின்வருமாறு:-

தலைவர் திரு. ஞா. முருகேசு, காரியதரிசி திரு வீ. ந. சண்முகம், தனாதிகாரி திரு. சி. தர்மலிங்கம், நிர்வாகஸ்தர்கள் திரு. செ. யோகீஸ்வரன், திரு ஐ. இராமலிங்கம், திரு. சி. எஸ். கந்தையா, திரு, மு. டீ. ஞ். சாமிகேசன்.

---

# மந்திரிக்கு மகஜர்

அக்குறனை, ஞாயிறு

'பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இறுதிச் சோதனைப் பெறுபேறுகளைப் பார்த்துப் பரீட்சை அதிகாரிகளினால் வழங்கப்படும் தராதரப் பத்திரங்கள் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு மாத்திரமல்லாது முழு சமூகத்திற்குமே தீங்கு விளைவிக்கக்கூடிய செய்கையாகும்" என்று அகில இலங்கை அரசினர் முஸ்லிம் ஆசிரிய சங்கத்தினர் கல்வி மந்திரிக்கு சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

---

## கூட்டுப்பிரார்த்தனை

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி வடக்கு வாணன்புல முருகன் ஆலயத்தில் குகனடியார்களின் ஆதரவில் கூட்டுப்பிரார்த்தனை விழா நடைபெற்றது. விழாவில் "கூட்டுப் பிரார்த்தனையும் அதன் பெறுபேறுகளும்" என்னும் பொருள் பற்றி சங்கீதபூஷணம் விஜசித் தம்பி உரைநிகழ்த்தினர்.

---

## பாக். புயலில் மாண்டவர்கள்

டாக்கா, மே 16

பாகிஸ்தான் புயலில் இதுவரை மாண்டவர்கள் எண்ணிக்கை 1483 என அதிகாரபூர்வமான அறிக்கை கூறியது. ஆனால் 2000 பேர் மாண்டதாக ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்றன.

---

## பாகிஸ்தான் ஆட்சேபம்

கராச்சி, மே 16

அசாத் காஷ்மீர் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் அவிரக்கமற்ற முறையில் கடுவதை நிறுத்தும்படி, பாகிஸ்தான் 7 ஆட்சேபக் குறிப்புக்களை அனுப்பியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

---

## சங்கரத்தை கி. மு. ச. ஆண்டு விழா

சங்கரத்தை, ஞாயிறு

சங்கரத்தை கிராமமுன்னேற்றச் சங்க நிர்வாகசபைக் கூட்டம் டாக்டர் க. செல்லத்துரை தலைமையில் சங்கரத்தை மாதர் சங்கக் கூடத்தில் அண்மையில் கூடிய பொழுது ஜூன் மாதம் 21-ந் திகதி சங்கரத்தையிலுள்ள சகல சங்கங்களின் ஆண்டு விழாவையும் சிறப்பாக ஒரே இடத்தில் கொண்டாடப்பட வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

விழாவை சிறப்பாக நடத்துவதற்காக பல உப சபைகள் தெரிவுசெய்யப்பட்டன. விளையாட்டுப் பகுதிக்கு டாக்டர் க. செல்லத்துரை பொறுப்பாளராகவும், கமத்தொழில் பகுதிக்கு திரு. இ. தியாகராசா பொறுப்பாளராகவும், வரவேற்புப் பகுதிக்கு பொறுப்பாளராக திரு. செ. குமாரசாமியும், கிராம முன்னேற்றச் சங்கப் பகுதிக்கு பொறுப்பாளராக திரு. க. வயிரவநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கலைநிகழ்ச்சிகளின்பொறுப்பை மாதர் சங்கத்தினரும், இந்து வாலிபர் சங்கத்தினரும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

விழாவிற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்தையும் கமத்தொழில் அதிபரையும் உள்ளூராட்சி ஆணையாளரையும் அழைப்பதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

---

# "உரிமைகளைப் பெற்றுத்தர எங்களுக்கும் வழி விடுங்கள்"

## காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"42-ம் ஆண்டு முதல் 56-ம் ஆண்டுவரை தமிழ் பேசும் இனத்திற்கு எதிராக பெரும்பான்மை சமூகம் எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் தடுத்து நிறுத்தி, தமிழினத்தைக் காப்பாற்றிவந்த ஒரேயொரு கட்சி தமிழ்க்காங்கிரஸ்தான்" என்று நேற்று மாலை கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் வவுனியா எம். பி.யும், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. டி. சிவசிதம்பரம் பேசும்போது கூறினார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். பல தொகுதிகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான வாலிபர்கள் சைக்கிள் ஊர்வலமாகக் கூட்ட மைதானத்தை வந்தடைந்தார்கள்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

கடந்த 9 வருட காலமாக சமஷ்டி கட்சியினர் தமிழினத்தின் ஏகபோக பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் வீற்றிருந்தார்கள். மொழிப் பிரச்சினை, குடியேற்ற பிரச்சினை, இந்தியர் பிரச்சினை இதில் ஏதாவதொன்று தீர்த்து வைத்தார்களா? 9 ஆண்டுகளாக தமிழ் உரிமை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவந்தபோது என்ன நடவடிக்கை எடுத்தார்கள், 14 பேர் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துள்ளார்கள். ஒப்பந்தம் இருப்பதாகக் கூறி வருகிறார்கள், ஸ்ரீ பிரச்சினையை தீர்க்க பிரதமருடன் ஒரு வார்த்தை கதைத்தார்களா? கொடிப்பிரச்சினைபற்றி பாராளுமன்ற குழு கூட்டத்தில் பேசினார்களா? எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரும்படி கேட்கின்றோம். மூன்று வருட காலத்தில் தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்போம், அல்லது பதவிகளை உதறித்தள்ளிவிட்டு வருவோம். நாங்கள் உரிமைகளை பெற்றுத்தர முன்வரும் தருணத்தில் முட்டுக்கட்டை போடாதீர்கள், எங்களுக்கு வழிவிட்டு பொறுத்திருங்கள்."

திரு. ஸ்ரீதரன் பேசும்போது கூறியதாவது:-

தேர்தலுக்குமுன் எமது தலைவரைத் தாக்கிப் பேசி வந்த திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எமது தலைவரை பாராட்டிப் பேசியுள்ளார், சர். பொன்னம்பலம் இராமநாதனுக்குப்பின், தமிழினத்தைப் பாதுகாத்து வந்த பாதுகாவலன் திரு. பொன்னம்பலம் என்று கூறியுள்ளார். தமிழினத்தை அரசாங்கம் தாக்கமுற்பட்டால், திரு. பொன்னம்பலம் முன்னின்று எதிர்த்துப் போராடுவார் என்று திரு. அமிர்தலிங்கம் கூறியுள்ளார். இப்பொழுது இந்த ஞானம் பிறந்ததற்குக் காரணம் என்ன? நமது தலைவரைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு, தங்கள் முயற்சிகளில் வெற்றி பெற முயற்சிக்கிறார்கள்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது:-

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வட்டமேசை மகாநாட்டை பிரதமர் நிராகரித்ததாக எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர். எப்போது நிராகரித்தார் என்று கூற முடியுமா? வரவேற்பிலும், வாழ்த்துப்பாவிலும், பூமாலையிலும், பூமாலைக்கும் நாங்கள் எங்கள் நோக்கத்தை விற்கமாட்டோம். தமிழினத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவோம்.

சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு முதலிய இடங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு நேர்ந்தகதி மலைநாட்டுத் தமிழர்களுக்கும் ஏற்படவேண்டுமா? வடக்கு கிழக்கு மாகாணத்திலும் பார்க்க அதிகமான தமிழர் மற்றைய மாகாணங்களில் வாழ்கின்றார்கள். அவர்களின் உரிமைக்காகவும் தமிழ் காங்கிரஸ் பாடுபடுகிறது,

உடுவில் தமிழ் காங்கிரஸ் கிளைத் தலைவர் திரு. என். சிவகேசன் பேசும்போது மொழிப் பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்படுவதோடு இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் கூறினார்.

திரு. எஸ். சிறிபாஸ்கரன் பேசும்போது, தமிழினத்தின் உரிமைகளுக்காகப் பாடுபடும் அதே நேரத்தில் தமிழ்க் காங்கிரஸின் வளர்ச்சிக்காக உழைக்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசும்போது, தமிழினத்தின் இழந்த உரிமைகளைத் தமிழ்க் காங்கிரஸ்தான் பெற்றுத்தருமென்றும், கடந்த 20 வருட காலமாக தமிழினத்திற்காகப் பாடுபட்டுவரும் ஒரே ஒரு கட்சி தமிழ்க்காங்கிரஸ்தான் என்றும் கூறினார்.

திரு. நூர்முகமது பேசும்போது, தமிழ்க்காங்கிரஸில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை இங்கு திரண்டிருக்கும் ஆதரவாளர்கள் [illegible] என்று கூறினார் மற்றும் பலர் பேசினார்கள்.

---

# வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி கணேஷ்கிளப் வீரர்களுக்கும் சங்கானை லிங்கம் கிளப்வீரர்களுக்குமிடையே சிநேகித பூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. போட்டி சங்கானை சந்தைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்றது. சித்தங்கேணி கிளப்பைச் சேர்ந்த ந. இராசரத்தினம், எஸ். பத்மநாதன் ஆகிய இருவரும் கூடிய ஓட்டங்களைப் பெற்றனர்.

---

# 200 தொழிலாளர் கைதாயினர்

அமிர்தசரஸ், மே 16

அமிர்தசரஸில் நேற்று 200 ஆலைத் தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

---


S. R. S.
ஜவுளி மாளிகையில்
சேலை ஒன்று 11-00 ரூபா தொடக்கம்
பலவிலைகளில் பெற்றுக்கொள்ள நல்ல சந்தர்ப்பம்.
லங்கா சேலைகளும்
எமது சொந்த கைத்தறிகளில் தயார் செய்யப்பட்ட
நெசவு சேலைகளும்
ஏராளமாக விற்பனைக்கு உள்ளன.
மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்கும் சங்கக் கடைகளுக்கும் விசேஷ கமிஷன் உண்டு.
எஸ். ஆர். செல்லத்துரை
316, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 296.



இலங்கை கலைக்கழகத்
தமிழ் நாடகக் குழு
நாடக எழுத்துப் போட்டி-1965
முடிவுதேதி 1-9-65
விபரங்களுக்கு:-
பொதுச் செயலாளர்
இலங்கை கலைக் கழகம்
135, தர்மபால மாவத்தை, கொழும்பு - 7



வரி விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள இயந்திர வள்ளம்—நீளம் 37 அடி அகலம் 9 1/2 அடி, சீராசனம். ரஸ்டன் எஞ்சின் 3YDM 46 H P. மரீன் இன்டனிஷ் வள்ளத்தனம். வல்வெட்டித்துறையில் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் பார்வையிடலாம், C. C. சோமசேகரம், புரக்டர், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்றவிலாசத்திற்கு 31-5 65க்கு முன் தங்கள் விலை மனுக்களைச் சமர்ப்பிக்கவும். 366

தேவை

டிப்போ மனேஜர் துவரேலியாவிற்குத் தேவை. பிணைப்பணம் 750-00. சம்பளம் 185-00 சாப்பாட்டுச் செலவு 3-50, உடன் விண்ணப்பிக்கவும். மனேஜர், வடமாகாண வியாபார நிலையம், ஸ்ரேஷன் ரோட், சுன்னாகம். 272


---

# கன்சர்வேட்டிவ் தொடர்ந்து வெற்றி

லண்டன், மே 16

பிரிட்டனில் நடைபெற்ற 7 ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் நேற்று மேலும் 14 நகரசபைகளை கன்சர்வேட்டிவ் கட்சி கைப்பற்றியிருக்கிறது.

---

# செயலாளராக ஸ்ரீதரன் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ வாலிப முன்னணி செயலாளராக வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரன் ஏகமனதாக நேற்று நடைபெற்ற வாலிப முன்னணி மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்டார்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# விளையாட்டு அரங்கத்துக்கு அரசாங்கம் நிதி உதவி?

## நவீன முறையில் அமைக்க நிபுணர்கள் ஆலோசனை கூறுவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கத்தை (ஸ்டேடியத்தை) நவீன முறையில் அமைப்பதற்கு அரசாங்கம் நிதி உதவிகள் அளிக்கவிருக்கிறது. இதனுடன் ஸ்டேடியத்தைச் சிறந்த முறையில் நிறுவுவதற்கான நிபுணத்துவ ஆலோசனை கூறவும் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு ஸ்டேடியம் பூரணத்துவம் பெறும் நிலையில் இருக்கின்றது. இதற்கு நிதி நெருக்கடியே காரணமென்று கூறப்படுகிறது. இதில் சம்பந்தப்பட்ட சிலர் மேற்கொண்ட தீவிர முயற்சிகளைத்தொடர்ந்து இந்த அரங்கத்தை பூரணப்படுத்தும் வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமெனத்தெரியவருகிறது. இது சம்பந்தமாக ஆலோசனைகள் கூறும்பொருட்டு சில நிபுணர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வருவார்கள்.

### மந்திரியை பேட்டிகண்டார்

அண்மையில் தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசவும் திரு. எம். எச். மூகம்மதுவும் யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது; யாழ்ப்பாணம்முன்னாள் எம்.பியும் மாஜி மேயருமான திரு அல்பிரட் துரையப்பா மந்திரிகளைச் சந்தித்து யாழ்ப்பாணம் ஸ்டேடியம் சம்பந்தமாக பேச்சுகள் நடத்தினர். யாழ்ப்பாணம் விளையாட்டு ஸ்டேடியத்தை விரைவில் நவீன முறையில் அமைத்துக்கொடுக்க நிதியுதவியும் அளித்து நிபுணத்துவ ஆலோசனைகளையும் கூற விரைவில் தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக திரு அல்பிரட் துரையப்பாவுக்கு மந்திரி சுகததாசா உறுதி அளித்திருந்தார்.

# சர்வகட்சி மகாநாடு மூலமே நிரந்தரமான தீர்வுகாணலாம்

## பொதுக் கூட்டத்தில் ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இரகசிய ஒப்பந்தம் மூலம் ஒரு கட்சி ஓர் இனத்தின் உரிமைகளைப்பெற்றுக்கொள்ள முடியாது என்பதை திட்டவட்டமாக கூறுகிறேன் இந்த அரசாங்கம் உரிமைகளைக் கொடுத்தால், எதிர்க்கட்சி ஆட்சிக்கு அந்தபின் அந்த உரிமைகளைப் பறித்தெடுக்கும் ஆதலால் தமிழினத்தின் உரிமைகளை,எல்லாகட்சிகளும் ஒன்று சேர்ந்து விவாதித்து, தீர்மானித்து கட்சிபேதமின்றி சர்வகட்சி மகாநாட்டில் தீர்மானித்தால்,காலத்திற்குக்காலம். தேர்தலுக்குத் தேர்தல் தமிழினம் கஷ்டப்படாது

கோட்டை மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமைவகித்து திரு ஜி ஜி பொன்னம்பலம் பேசும்பொழுது மேற்கண்டவாறு கூறினார்

பெருந்திரளான மக்கள் கூடியிருந்த இக்கூட்டத்தில் திரு பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: எங்களைக்கலந்தாலோசிக்காமல் இரகசிய ஒப்பந்தம்மூலம்பெறும் உரிமைகள் நிலைக்காது; காரணம், நாங்களும் பாராளுமன்றக் குழுவில் இருப்பதால், இந்த ஒப்பந்தம் பற்றி எங்களின் ஆலோசனையைப்பெறபிரதமர் பாராளுமன்றக்குழுவில் கொண்டுவருவார் என்பதைக் கூறுகிறேன்

தமிழினத்தின் உரிமைகளை யார் பெறமுற்பட்டாலும் அதை நான் வரவேற்கின்றேன் ஆனால் தமிழினத்துக்கு பாதகமான முறையில் ஒப்பந்தம் அமையுமானால் அதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்

தமிழினத்தின் உரிமைகளைப்பெற தமிழினம் ஒற்றுமைப்பட வேண்டும் என்று நான் வேண்டுகோள் விட்டேன் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின்பும், தமிழினத்தின் அடிப்படை உரிமைகளைப்பெற ஒற்றுமைப்படும்படி தாழ்மையுடன் கேட்டேன் ஆனால்மறுத்து விட்டார்கள்

தமிழரசுக் கட்சியினரும் நாங்களும் பாராளுமன்றக் குழுவில் இருப்பதால், மற்றக் கட்சியினரை தாக்கிப் பேசக் கூடாதென்று என்கட்சியை சேர்ந்தவர்களுக்கு கூறினேன். நானும் அவர்களை தாக்கிப்பேசாது எனது நாவை அடக்கி வைத்திருந்தேன் ஆனால் அவர்கள் தமிழ்ப் பகுதியில் வந்து எங்களை மீண்டும் தாக்கிப்பேச ஆரம்பித்துள்ளார்கள்

பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு, பிடிகொடாமல் பிரதமர் பதிலளித்தார். ஆனால் செனட்சபையில் மந்திரி திருச்செல்வம், சிங்களச் சட்டத்தை மாறறமுடியாது நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம் என்றார்

திரு திருச்செல்வம், சிங்களத்தை ஏற்றுக் கொள்வதாக கூறியபின், நான் சிங்களச் சட்டத்தை மாற்றும்படி எப்படி கேட்க முடியும்? சிங்கள சட்டத்தை மாற்ற சிங்கள மக்கள் விடுவார்களா? நல்லதோர் சந்தர்ப்பத்தை வீண் வார்த்தைபேசி மந்திரி திருச்செல்வம் கெடுத்துவிட்டார். இதனால்தான், பல்முறை ஒற்றுமை வேண்டுமென்றும்,ஒன்றுபட்டு நமது உரிமைகளை பெறுவோம் எனக் கூறினேன், சிங்களத்தை ஏற்றுக் கொண்டதாக மந்திரி திருச்செல்வம் கூறியபோதிலும் தமிழினத்தின் சார்பில் அதைக்கூற அவருக்கு உரித்தில்லை என்பதை கூறுகிறேன்.

பல தொகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான வாலிபர்களின் சயிக்கிலூர்வலம் கூட்ட மைதானத்தை வந்தடைந்தது

# யாழ். தெரிவு கோஷ்டியிடம் கண்டி கோஷ்டி தோல்வி

## இரண்டு இன்னிங்ஸிலும் அன்ரன் பதினொரு விக்கட்டுகளை வீழ்த்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் தெரிவுக்கோஷ்டிக்கும், கண்டி பல்கலைக் கழகத் தெரிவுக்கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் கிரிக்கெட் கோஷ்டி மகத்தான வெற்றியீட்டியுள்ளது. 10 விக்கெட்டுகளால் யாழ். கோஷ்டி வெற்றியீட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் தெரிவுக் கோஷ்டியே முதலில் ஆட்டத்தொடங்கி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 335 ஓட்டங்களை எடுத்தது. இதனைத் தொடர்ந்து விளையாடிய கண்டி பல்கலைக் கழக கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 204 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் கண்டி கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 139 ஓட்டங்களை எடுத்தது.யாழ்ப்பாண கோஷ்டி வெற்றிக்கு தேவையான 9 ஓட்டங்களையும் விக்கெட்டுகள் நஷ்டமின்றிப் பெற்றுக்கொண்டது

### கண்டி கோஷ்டி

கண்டி பல்கலைக்கழகத் தெரிவுக் கோஷ்டியைப் பொறுத்தமட்டில் ஜெயசிங்கா, காமினி ரத்ன, ஜெட்டிக்கோ ஆகியோர் சிறந்துவிளங்கினர், ஜெயசிங்கா 87 ஓட்டங்களை (இப்போட்டியில் கூடுதல் ஓட்டங்களை) எடுத்து ரசிகர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார், காமினி 39 ஓட்டங்களும் ஜெட்டிக்கோ 31 ஓட்டங்களும் பெற்றனர். ஆனால் இலங்கையிலே இரண்டாவது சிறந்த விக்கெட் கீப்பரான இக்கோஷ்டியின் காப்டன் இங்கு நடைபெற்ற போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தது ஒரு துரதிஷ்டமென்றே சொல்லலாம்

### யாழ்ப்பாணம் கோஷ்டி

யாழ்ப்பாணம் தெரிவுக் கோஷ்டியில் ரொனல்ட் 81 ஓட்டங்களும், கனகதுரை 50 ஓட்டங்களும் பெற்று ரசிகர்களின் பாராட்டுதல்களை பெற்றனர்.

### சபாஷ் அன்ரன்!

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் தெரிவுக்கோஷ்டியைச் சேர்ந்த அன்ரன் திறமையாக விளையாடி கிரிக்கெட் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டார். அவரின் பந்துவீச்சு இப்போட்டியில் அற்புதமாக இருந்தது. இவர் வீசியபந்துகள் மின்வீச்சில் பறந்துசென்று எதிர்தரப்பு விக்கட்டுகளை வீழ்த்தியது. 42 ஓட்டங்கள் கொடுத்து ஏழு விக்கட்டுகளை அன்ரன் வீழ்த்தியது அவரின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவர் இரண்டு இன்னிங்ஸிலும் பதினொரு விக்கட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். முதல் இன்னிங்ஸில் ஏழு விக்கட்டுகளையும் இரண்டாம் இன்னிங்ஸில் நான்கு விக்கட்டுகளையும் இவர் வீசியபந்துகள் பதம்பார்த்திருக்கின்றன

கண்டி தெரிவுக்கோஷ்டி (முதல் இன்னிங்ஸில்) இரண்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 160 ஓட்டங்கள் எடுத்த பொழுது யாழ்ப்பாணம் தெரிவுகோஷ்டி வீரர்கள் சிறிது திகிலடைந்தனர். இந்த கட்டத்தில் அன்ரன் பந்துவீசத்தொடங்கினர் மதியபோசன இடைவேளைக்குமுன்னர் ஓட்டங்களை கண்டி கோஷ்டியினர் பெறுவதற்குள் அன்ரன மளமளவென்று பந்து கனை வீசித்தள்ளி எட்டு விக்கட்டுகளை வீழ்த்தினர்

இக் கிரிக்கெட் போட்டி நடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் இங்கு நிகழ்ந்தது

---

### தொல்புரம் பத்தாளை வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் பத்தாளை விளையாட்டு கழக கிரிக்கெட்கோஷ்டிக்கும் சுழிபுரம் கட்டுடை கோஷ்டியினருக்குமிடையே பத்தாளை சேணிக்கரைகமையில் சினேகிதபூர்வமாக நடைபெற்ற போட்டியில் பத்தாளை கோஷ்டியினர் மேலதிக நாலு ஓட்டங்களால் வெற்றிபெற்றனர், ஸ்கோர் விபரம்- பத்தாளை விளையாட்டு கழகம் முதலாம் இன்னிங்ஸ- 72, 2ம் இன்னிங்ஸ 62, சுழிபுரம் கட்டுடை முதலாம் இன்னிங்ஸ- 71, 2ம் இன்னிங்ஸ 59, மத்தியஸ்தர்களாக பொ. விஜயரட்ணம், ஏ. அரசரட்ணம்,எம். கிருஷ்ணமூர்த்தி, எஸ். கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கடமையாற்றினர்.

---

### சிரமதானம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பறுளை முருகமூர்த்தி கோவில் தாமரைகேணி புனரமைப்பு வேலைகள் சிரமதான முறையில் சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. கந்தசுவாமி தலைமையில் சுமார் ஐம்பது தொண்டர்களுடன் ஆரம்பமானது. வேலைகளைப் பூர்த்தியாக்குவதற்கு ஒருவாரகாலம் எடுக்குமெனக் கூறப்படுகின்றது. வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள கோவில்களிலுள்ள பெரிய கேணிகளில் இக்கேணி தான் மிகப்பெரியதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### விவசாயபடக்காட்சி

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு விவசாய விஸ்தரிப்பு பகுதியினரால் ஓர் விவசாய படக் காட்சி தொல்புரம் பாணுவெட்டை சன சமூக வாசிகசாலை மைதானத்தில் காண்பிக்கப்பட்டது கோழி வளர்ப்பு கால்நடை வளர்ப்பு உலகசந்தையில் கால்நடைப் போட்டி சம்பந்தமான காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

---

### அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்

வவனியா, சனி

வவனியா அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வவனியா கச்சேரியில் சங்கத்தின் தலைவர் திரு. [illegible] பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

தாய்ச்சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளர் அசோகா ஹேரத், உதவித் தளதிகாரி ஹேத்துமுனி ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. பி. வி. ஹேரத், உபதலைவர்கள்: திரு. கா. பாலரத்தினம், திரு எஸ். சிற்றம்பலம், கௌரவ செயலாளர்: திரு. செ. கணேஷ், உதவிச் செயலாளர்: திரு. டி. தே. கமகே, பொருளாளர்: திரு. ரகுநாதபிள்ளை, 7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

### கெனடி கோஷ்டி வெற்றி

சுழிபுரம், சனி

தொல்புரம் கெனடி கழக சிறுவர் கோஷ்டிக்கும் தொல்புரம் மத்திய சன சமூக நிலைய சிறுவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் கெனடி கோஷ்டியினர் மேலதிகமாக 67 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர். கெனடி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் கெனடிகோஷ்டியினர் முதல் ஆட்டத்தில் 108 ஓட்டங்களையும் சன சமூக கோஷ்டியினர் முதல் இரண்டு ஆட்டங்களிலும் 19, 22 ஓட்டங்களையும் பெற்றனர். மத்தியஸ்தர்களாக [illegible] யோ. பத்மநாதன் ஆகியோர் கடமையாற்றினர்.

---

### ஐயாறன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரான ஒரு பெரிய குருக்கள், தம் இரு கைகளையும் சிரம் குவித்து வணக்கம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தைப்பற்றியும், ஸ்ரீ நாவலர் பெருமானைப்பற்றியும் அங்கு அவ்வளவு மதிப்பும் மரியாதையும் உள்ளதைக்காண மிக மகிழ்ச்சியாக இருந்தது.

• • •

தாயு நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன், ஆவி நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றதுள்ளம், ஆயமாய காயந்தன்னுள் ஐவர் நின்றொன்ற வொட்டார், மாயமேயென் நஞ்சகின்றேன் வலிவலமேயவனே,

—திருஞானசம்பந்தசுவாமிகள்

---

### பண் சேவை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரயாணிகளின் குறைகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்க பின்வரும் நிர்வாகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர்: திரு. இ. த. சுப்பிரமணியம், உபதலைவர்: திரு. ஆ. பரமசாமி, செயலாளர்: திரு. க. பொ. கனகநாயகம், பொருளாளர்: திரு மு. கா கணபதிப்பிள்ளை,நிர்வாகசபையினர். திரு. க. குமாரசாமி, திரு. கு. வி. மகாலிங்கம், திரு. க. சரவணமுத்து, திரு. க. சங்கரப்பிள்ளை. திரு. க. கி ராமமூர்த்தி, முறையீட்டைத் தயாரிக்க ஓர் உபசபையும் நிறுவப்பட்டது.

---

### ஆடு திருடியவர் அகப்பட்டார்

சுன்னாகம், ஞாயிறு

சண்டிருப்பாய் வாசியான அன்னம் சிவசம்புவிற்குச் சொந்தமான வெள்ளாட்டை இராசு தம்பித்துரை என்பவர் களவாடி கட்டுவட்டியில் விற்றபொழுது கையும் மெய்யுமாகசங்கானைப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டார். ஆடு சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்து வழக்குத்தொடரப்படவுள்ளது.

---

### வெசாக் விழா

சுழிபுரம், ஞாயிறு

சங்கானை பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் ஏற்பாட்டினால் சங்கானை பொலிஸ்நிலையத்துக்கு முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் வெசாக்விழா இரண்டுதினங்களாக வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காதலைவரக்கச்சேரி, சொற்பொழிவுகள், இரண்டுதினமும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் வைபத்தில் கலந்து கொண்டனர். மின்சாரதீபங்களாலும், கொடிகளாலும் விழாமைதானம் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

---

இவ்வத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 56-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org